27 பிப்ரவரி 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஆண்டின் 8 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக சமூக நீதி தினம்**

# ஆண்டவரே நமது போதகராக இருக்கட்டும்



பரபரப்பான சாலைசந்திப்பில் பார்வையற்ற ஒருவர் நின்று கொண்டிருந்தார். மற்றொரு பார்வையற்றவர் அவரிடம் வந்து சாலையைக் கடக்க உதவி செய்வீர்களா என்று கேட்டார். முதல் பார்வையற்றவர் தாம் உதவிச் செய்கிறோம் என்று நினைத்துக்கொண்டு, கண்டிப்பாக செய்கிறேன் என்று கூறி அவர் கையைப் பிடித்து சாலையைக் கடக்க முன்வந்தார். என்ன நிகழ்ந்திருக்கும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். மிகுந்த சத்தத்துடன் வாகனங்கள் நிறுத்தப்பட்டன. பார்வையற்ற இருவரும் அங்கிருந்து ஓட்டமெடுத்தனர்.

ஆன்மீகரீதியில் பார்வையற்ற ஒருவர் மற்றொருவரை வழிநடத்த முயற்சிக்கும்போது இவ்வாறுதான் நிகழும். இது எவ்வாறென்றால், பாவம் செய்த ஒருவர் அடுத்தவரின் பாவத்தைப் பற்றி சொல்ல முயற்சிப்பது மிகவும் கடினம். குருடர் குருடருக்கு வழிகாட்டுகிறார். நம்முடைய வாழ்க்கையில் நடந்த பாவங்களை நேர்மையாக கண்ணோக்குவதைவிட மற்றவரின் வாழ்க்கையில் உள்ள பல பாவங்களைச் சுட்டிக்காட்டுவோம். நம்முடைய விரலை பிறரை நோக்கி சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆனால் யாராவது நம்மை நோக்கி அதைச் சுட்டிக்காட்டினால் மிகவிரைவாக நம்மைத் தற்காத்துகொண்டும், நமது தோல்விகளுக்கு சாக்குபோக்குகளைக் கூறவும் செய்கிறோம்.

பிறருக்கு நீதி வழங்குவதோ, அல்லது கண்டிப்பதோ கூடாது என்று இயேசு நமக்கு அறிவுறுத்துகிறார். இந்த அறிவுரை நம்முடைய தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது. இயேசுவின் போதனை அடிப்படை உண்மையை போதிக்கிறது. நாம் மாணவர்கள். இன்னும் கற்றுக்கொண்டிருப்பவர்கள். ஆசிரியர் தான் போதகர். நம்மில் பலர் எல்லாவற்றையும் நாம் கண்டுபிடித்துவிட்டோம், யாரும் நமக்குக் கற்பிக்கத் தேவையில்லை என்று நினைக்கிறோம். இந்த மனப்பான்மையை நீங்கள் வளர்த்துக்கொண்டால், ஆசிரியருக்குக் கற்பிக்க முயலும் மானவர்களாக மாறுவீர்கள். நாம் யார் என்பதை நேர்மையான உணர்வோடு அறிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். போதகரின் காலடியில் நாம் வெறும் மாணவர்களே

சில சமயங்களில் நம்முடைய அடிமைத்தனங்கள் நமக்கு போதகர்களாக இருக்கின்றன. தொலைக்காட்சி, திரைப்படங்கள், சமூக ஊடகங்கள், தொடர்ச்சியான தொலைபேசி இன்னும் முகநூல் ஆகியவை. பல சமயங்களில் இவை பயனுள்ளவையாகத் தோன்றினாலும், உலகப் பார்வையை வழங்கினாலும், இவற்றையெல்லாம் எவ்வாறு சீர்படுத்தினால் நம்முடைய வாழ்க்கையை விண்ணகத்தை நோக்கிச் செலுத்தமுடியும் என்று செயல்படுவதே தனிச்சிறப்பு. நம்மை வழிநடத்தும் போதகர்கள் பலர் இன்னும் இருக்கிறார்கள். இவர்கள் எப்போதும் உண்மையைத் தான் சொல்வார்கள் என்று நாம் நினைக்கும் ஆபத்தான செய்தியைக் கொண்டவர்கள். நல்லவை போலத் தோன்றினாலும், புண்படுத்தி தீங்கு விளைவிப்பவர்கள். இதுபோன்றவர்கள் கடவுளை நோக்கிச் செலுத்தும் தூய ஆவியின் குரலை அடக்கிவிடுபவர்கள். நாம் ஏமாறவேண்டாம் என்று இயேசு நம்மை எச்சரிக்கிறார். கடவுளின் குரலை ஆயந்தறிவதற்கு ஒரே வழி உண்மையும் வழியும் வாழ்வுமான இறைவனில் நாம் செய்யும் தொடர்ச்சியான இறைவேண்டல் மட்டுமே.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

... புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்

(யோவான்: 13:34)

**இன்றைய வாசகங்கள்:**

சீராக்: 27: 5-8;
திபா: 92: 2-3, 13-16;
1 கொரி: 15: 54-58;
லூக்கா: 6: 39-45.

INTERNAL CIRCULATION ONLY
BUL 09/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org